ஆசியாவின் பகுதியான தமிழீழம்
அதில் அன்னியரின் அட்டகாசம் நடக்குதடா
கேட்பதற்கு யாரும் இல்லை என்ற எண்ணங் கொண்டதனால்
மந்திகளின் வம்புகளும் கூடுதடா

ஆசியாவின் பகுதியான தமிழீழம்
அதில் அன்னியரின் அட்டகாசம் நடக்குதடா

தேசம் காக்கும் போர்களிலே பல வடிவம்
அதில் தவளை பாச்சல் இதய பூமி சில வடிவம் 2
ஓயாத அலையலையாய் புலிபாயும் ஒரு வடிவம்
எதிரிகளின் பாசறைகள் சுக்காகும் 2

தங்கத்தமிழ் ஈழத்தினை பாரடா
நடந்த பல வீரக்கதை கேளடா 2
பாயும்புலியின் வேகம் கண்டு
ஓட்டம் எடுத்த அன்னியரின்
சோகக்கதையை அன்னும் கொஞ்சம் கேளடா 2

ஆசியாவின் பகுதியான தமிழீழம்
அதில் அன்னியரின் அட்டகாசம் நடக்குதடா
கேட்பதற்கு யாரும் இல்லை என்ற எண்ணங் கொண்டதனால்
மந்திகளின் வம்புகளும் கூடுதடா

அண்டை நாடும் படையெடுத்து வந்தது
தமிழ் ஈழம் எங்கும் நிலையெடுத்து நின்றது 2
ஈழ மக்கள் காக்கவென்று கப்பலேறி வந்த படை
ஈழத்தையே சூறையாடிக் கொன்றது
தமிழ் ஈழத்தையே சூறையாடிக் கொன்றது

பொய்யுரைக்கும் சிங்களத்தின் அரசியலும்
சேர்ந்து தாளம் போடும் கும்பல்களும் 2
ஈழமக்கள் இடையினிலே பிளவுகளை உண்டு பண்ண
திட்டங்களை போட்டு போட்டு பாத்ததுவே
சதி திட்டங்களை போட்டு போட்டு பாத்ததுவே

தங்கத்தமிழ் ஈழத்தினை பாரடா
நடந்த பல வீரக்கதை கேளடா 2
பாயும்புலியின் வேகம் கண்டு
ஓட்டம் எடுத்த அன்னியரின்
சோகக்கதையை அன்னும் கொஞ்சம் கேளடா 2

தமிழ் தேசம் காக்க வந்த படை புலிப்படை
தமிழ் மனம் காக்க வந்த கொடி புலிக் கொடி
தமிழ் ஈழம் எங்கள் தாயகம் தமிழர்களின் சொந்த மண்
தலைவர் வழியில் ஓரணியில் செல்லுவோம்
எங்கள் தலைவர் வழியில் ஓரணியில் செல்லுவோம் 3